1972 ஆகஸ்ட் 24]

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த விதிப்படி வேலை பார்த்த ஒரு தலைமை ஆசிரியர் மறுபடி சாதாரண ஆசிரியராக திருச்சியில் ஒரு உயர் துவக்கப் பள்ளியில் இறக்கப்பட்டிருக்கிறார் என்று புகார் ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எந்த மாவட்டத்திலிருந்தும் எந்தப் புகாரும் யாரிடத்திலும் வரவில்லை என்ற குறிப்பு தரப்பட்டிருக்கிறது.

LIC Loan for Panchayats

*239 Q.—Thiru S. Vellapandian (on behalf of Thiru **V. Isvarmurti**) : **Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—**

(*a*) whether there are proposals under the consideration of the Government to approach the Life Insurance Corporation of India for financial assistance for the construction of School Buildings in Panchayats in this State; and

(*b*) if so, the details thereof?

ஊராட்சிகளுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் நிதி உதவி

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் உள்ள ஊராட்சிகளில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி உதவி பெறுவதற்காக இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை அணுகும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்துடன் இது சம்பந்தமாக நடந்த விரிவான பேச்சு வார்த்தைகளுக்குப் பின் அக்கழகமும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் அளிக்க முன்வந்துள்ள கடன் உதவியை ஊராட்சிகள் பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணியினுக்காகப் பயனுள்ளதாக எவ்வகையில் அவைகளுக்கு வழங்கலாம் என்பதை அரசு ஆராய்ந்து வருகிறது.